ஏற்றிச் செல்கிறார்கள் என்ற பொருள் வரும். அந்த வாகனத்தில் இரண்டு பேர்தான் செல்ல வேண்டும். அந்த இரண்டு பேரும் தலைக் கவசம் அணிய வேண்டுமென்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம்.

பார்வை இழந்தோருக்கு இலவசப் பயணச்சீட்டு சலுகை

*வினா எண். 576—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்பார்வை இழந்தோருக்கு மாதம் இரு முறை சிகிச்சைக்கு செல்வதற்காக இலவசப் பயணச்சீட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வந்தது இன்னும் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) அத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) ஆம்.

(ஆ) கண் பார்வையற்றவர்கள் மருத்துவமனை/வேலை செய்யுமிடம்/கல்விக்கூடம் முதலிய இடங்களுக்கு தங்கள் இல்லங்களிலிருந்து பேருந்துகளில் இலவசமாக சென்று வர இலவச பாஸ் கொடுக்கப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர ஏனைய போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்படுகின்றன.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த இலவச பஸ் வசதி எத்தனை பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கண்பார்வை அற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய ஊனமுற்றோர்களுக்கு இந்த வசதி நீட்டிக்கப்படுமா என்பதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: : தலைவர் அவர்களே, இதுவரையில் 1,044 பேர்களுக்கு இப்படிப்பட்ட பாஸ் வழங்கப்படுகிறது. இன்னும் உள்ள ஊனமுற்றோர்களுக்கு அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். இது ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால் மற்ற ஊனமுற்றோர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா என்பது பற்றி பின்புதான் அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் பேருந்துகளில் தாங்களாகவே ஏறி கண் மருத்துவ மனைக்குச் செல்ல முடியாது. அவர்கள் துணைக்கு ஒருவர் நிச்சயமாக செல்ல வேண்டும். அப்படி துணைக்குச் செல்லுகிறவர்களுக்கும் இத்தகைய பாஸ் வசதி செய்து கொடுக் கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் துணைக்குச் செல்பவர் களுக்குத்தான் வழங்கினோம் என்று சொன்னால், இதை ஏன் உறுப்பினர் கேட்டார் என்று புரியவில்லை. இருந்தாலும் இப் போதுதான் முதன் முறையாக அவர்களுக்குக் கொடுக்கிறோம். அடுத்தவர்களுக்கு சலுகை அளிப்பது பற்றி மீண்டும் சிந்திப் போம்.

கிராமங்களிலுள்ள முதியோர்களுக்கான உதவித்தொகை.

*வினா எண். 577— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கிராமங்களிலுள்ள தகுதி வாய்ந்த முதியோர்கள் அனைவருக்கும் முதியோர் பென்சன் கொடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்:

(அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தில் 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட ஆட்சியர்களால் அனுமதி வழங்கப்பட்டு தற்சமயம் 1,27,610 நபர்கள் உதவித்தொகை பெறுகின்றனர். மீதமுள்ளவர்களுக் கும் விரைவில் வழங்கப்படும். இதுதவிர தகுதி வாய்ந்த அனை வரும் முதியோர் உதவித் தொகை பெற வழி வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, முதியோர் உதவித்தொகைக்காக எல்லா வயதானவர்களும் போடுகிறார்கள். ஆனால் அப்படிப் போடும்போது அரசு பரிசீலனை செய்து அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அந்த முதியோர் உதவித் தொகை கிடையாது என்று சொல்லு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS